# எழுப்புதல் தொனி

**EZHUPUTHAL THONI**

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-




# நான் உங்களை நடத்துவேன்!


மலர்: 19 | Volume: 19 ஜூலை 2023 | July 2023 இதழ்: 3 | Issue: 3





ஒடிசா மாநிலம் இராயகடா, மல்கன்கிரி,
நபரங்கபூர், கோராபுட் மாவட்டங்களில்
நடத்தப்பட்ட விடுதலை முகாம்கள்.







# உங்கள் சகோதரனிடமிருந்து...



இணையில்லா இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, நீங்கள் கர்த்தருக்குள் சுகமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். கடந்து சென்ற கல்வி ஆண்டில் உங்கள் பிள்ளைகளை பாதுகாத்த தேவன் இந்த கல்வி ஆண்டிலும் பிள்ளைகளை பாதுகாத்து தமது ஞானத்தினால் நிரப்பி ஆசீர்வதிக்க கருத்தாய் ஜெபிக்கிறேன். படித்து முடித்து வேலைக்காக காத்திருக்கிற உங்கள் பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. ***அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். – ஏசாயா 33:16*** என்ற வார்த்தையின்படியே ஆசீர்வதிப்பார். கடந்த நாட்களில், நமது ஒடிசா மாநில பணித்தளத்திலே சுமார் ஒன்பது இடங்களில் விடுதலை முகாமை நடத்தினோம். அதின்மூலமாக அநேகர் சாத்தானுடைய கட்டிலிருந்தும் பாவக்கட்டுகளிலிருந்தும் அற்புதமாக விடுதலை பெற்றார்கள். தற்போது நமது பணித்தளத்திலே பதினைந்து இடங்களில் ஆலயக்கட்டுமான பணி நடைபெறுகிறது.

மேலும் கடந்த மாதத்தில் சிறுவர் மத்தியில் நடைபெற்ற கூட்டங்களில், 4000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டார்கள். தேவன் சிறுவர்களை இரட்சிக்கும்படியாக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஒடிசாவில் முப்பது மாவட்டங்களிலும் முழுமையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். நான் ஒவ்வொரு நாளும் என் ஜெபங்களில் உங்களை நினைவுகூர்ந்து தேவனுடைய கிருபையினால் நிரப்பப்பட ஜெபிக்கிறேன். தேவன் உங்களோடு கூட இருப்பாராக.

எழுப்புதல் பணியில்,



**(T.ஆசீர் ஞானராஜ்)**

**வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.**

**96294 99532**

Follow us youtube channel:
**Asir Gnanaraj**

**24 மணி நேர ஜெப உதவிக்காக:**
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 96294 99532**
Email: calvarygospelmm@gmail.com

**https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)**

# நான் உங்களை நடத்துவேன்!



**இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே. – ஏசாயா 48:17**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, ஆண்டவர் தன்னைக் குறித்து ஜனங்களுக்கு தீர்க்கதரிசிகள் மூலமாக அறிமுகப்படுத்தும்போது நான் மீட்பர் உன்னை மீட்கிறவர் என்று சொல்லுகிறார். பாவத்திலிருந்து சாபத்திலிருந்தும் வியாதியிலிருந்தும் துக்கத்திலிருந்தும் நுகத்திலிருந்தும் உன்னை மீட்டெடுக்கிற மீட்பர் என்று சொல்லுகிறார். அன்பில் பரிசுத்தமுள்ளவர் என்று வேதம் சொல்லுகிறது. உங்கள் மீது கொண்ட அன்பிலே ஆண்டவர் பரிசுத்தமுள்ளவர். அவர் மாறாதவர். தன்னைக்குறித்து அப்படியான அடையாளத்தைக் காட்டி உன் மீட்பராகிய நான் பரிசுத்தர் நான் உனக்கு சொல்லுகிறேன் பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் உனக்கு மறைக்காமல் **நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் – சங். 32:8** என்று சொல்லுகிறார். பிரயோஜனமாயிருக்கிறதை ஆண்டவர் போதிக்கிறவர்.

ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் எனக்குள் பெரிய சோர்வு உண்டானது. ஆண்டவர் கொடுத்த இந்த ஊழியத்தை நாம் எப்படி செய்யப் போகிறோம். எத்தனை காலம் தான் இதே நெருக்கடியில் இந்தவிதமான பாதையில் போவது என்று ஆண்டவரே நீர் கொடுத்திருக்கிற இந்த ஊழியம் மிகவும் பாரம் மிகவும் கடினம் இதை என்னால் சுமக்க முடியாது ஏன் எனக்கு மட்டும் இப்படி ஒரு ஊழியத்தைக் கொடுத்திருக்கிறீர் என்று ஆண்டவரிடத்தில் சண்டையிடுவதற்காக நான் ஒருநாள் உபவாசம் பண்ணி ஒருதோட்டத்தில் போய் ஜெபித்துக்கொண்டிருந்தேன். என் உள்ளத்தில் இருக்கிற வருத்தத்தை நான் ஆண்டவரிடத்தில் தெரியப்படுத்தினேன். எனக்கு மட்டும் ஏன் இந்த பெரிய பாரம் எனக்கு ஏன் இந்த வேதனை, நிந்தை, பாடுகள் என்று கேட்டேன். அந்த நாளில் உபவாசத்தை முடிக்கக் கூடிய நேரம் வந்தது. அந்த தோட்டத்தைச் சுற்றிலும் சில வீடுகள் இருந்தது. அதில் ஒரு வீட்டில் தொலைக்காட்சியிலோ அல்லது வானொலியிலோ ஒரு சம்பவத்தை ஒருவர் சொல்லக் கேட்டேன். அந்த சம்பவம் கதையாக இருந்தது. அந்த கதையில் ஒரு கிராமத்தை தேவன் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாராம். அதில் ஒருவர் மாத்திரம் ஆண்டவரே எனக்கு அதிகமான பாடுகள், சோதனைகள் இருக்கிறது. என்னை மட்டும் எதற்காக இவ்வளவாய் சோதிக்கிறீர் என்று சொல்லிக்கொண்டே இருந்திருக்கிறார். ஆண்டவர் அதை கவனித்து பார்த்தபோது அந்த கிராமத்திலிருக்கிற அனைவருமே அதே வார்த்தையை சொல்லிக் கொண்டிருந்தார்களாம். ஒரு நாள் தேவன் அந்த கிராம மக்களைப் பார்த்து நாளை மாலை ஏழு மணிக்கு ஆலயத்தில் மணி அடிக்கும் அப்போது நீங்கள் எல்லாரும் உங்கள் பாரத்தையெல்லாம் மூட்டை முடிச்சுகளாக கட்டி எடுத்துக்கொண்டு ஆலயத்திற்கு வந்துவிடுங்கள். மறுபடியும் மணி அடித்து பத்து நிமிடம் மின்சாரம் தடைபடும் அந்நேரத்தில் உங்களிடமிருக்கும் பாரத்தை ஒருவர் மாற்றி ஒருவர் எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். கிராம மக்கள் சரி என்று சொல்லி அனைவரும் மூட்டை முடிச்சுகளாக அவர்கள் பாரத்தை தூக்கிக் கொண்டு வந்தார்களாம். அப்போது எனக்கு அதிக பாரம் பாரம் என்று சொல்லிக்கொண்டிருந்த அந்த மனிதர் அவருடைய மூட்டை முடிச்சுகளை கட்டிக்கொண்டு முதல் நபராக ஆலயத்திற்கு முன் போய் நிற்கிறார். நிறைய பேர் மூன்று நான்கு பத்து சாக்குகள் என்று சுமக்க முடியாமல் தரையிலே இழுத்துக் கொண்டு வந்தார்களாம். இதை அவர் பார்த்துக்கொண்டிருந்திருக்கிறார். ஒருவர் மட்டும் கையில் ஒன்றுமே இல்லாமல் வந்திருக்கிறார். அப்போது அதிக பாரம் பாரம் என்று சொன்ன அந்த மனிதர் அவரைப் பார்த்து உனக்கு பாடுகளே கிடையாதா நீ மிகவும் சந்தோஷமாக கையை வீசிக்கொண்டு வந்திருக்கிறாயே என்று கேட்ட போது என் பாடுகளை கையில் தூக்கிக்கொண்டு வர முடியாது அதனால் பின்னாக லாரியில் வருகிறது என்று சொல்லியிருக்கிறார். ஒரு வழியாக பாடுகள் எல்லாவற்றையும் இறக்கி விட்டு எல்லோருமே அந்த பெரிய ஆலயத்திற்கு முன்பாக

நிற்கிறார்கள். அப்போது மணி அடித்தவுடன் மின்சாரம் தடைபடும் பாடுகளை மாற்ற வேண்டும். அதே போல ஆலயத்தில் மணி அடித்ததும் மின்சாரம் தடைபட்டு பத்து நிமிடங்கள் கழித்து மீண்டும் மின்சாரம் வந்தது. ஒருவர் கூட தன்னுடைய பாடுகளை மாற்றாமல் தன்னுடைய பாடுகளை இறுக கட்டிக்கொண்டு அப்படியே நின்று விட்டார்கள். அப்போது அநேக பாடுகள் என்று சொன்ன மனிதனைப் பார்த்து ஆண்டவர் உன் பாடுகளை நீ மாற்றவில்லையா என்று கேட்ட போது இந்த பழக்கப் பட்டபாடுகளே பெரிய கஷ்டமாக இருக்கிறது பழகாத பாடுகளை என்னால் சுமக்க முடியாது. எனக்கு இருக்கிற இந்தப்பாடுகளே போதும். எல்லாரும் அநேக பாடுகளை சுமந்து கொண்டு வந்திருக்கிறார்கள். என் பாடு மட்டும் எனக்கு போதும். உமக்கு கோடி நன்றி என்று சொன்னானாம். இந்த கதையை நான் உபவாசம் பண்ணிக்கொண்டிந்த அந்த வேளையில் என் காதுகளில் விழும்படி ஆண்டவர் செய்தார். இதை கேட்ட பின்பு எனக்கு அநேக பாடுகள் கஷ்டங்கள் என்று சொல்லி ஜெபிக்க முடியுமா? இல்லை, ஆண்டவரே என்னை மன்னித்துவிடுங்கள் என்று முகங்குப்புற விழுந்து அழுதேன்.

*அவர் பிரயோஜனமானவைகளை நமக்கு போதிக்கிறவர். உனக்கு பிரயோஜனமானதை போதித்து நாம் நடக்க வேண்டிய வழிகளில் நம்மை நடத்துகிற கர்த்தர் நானே என்று ஆண்டவர் சொல்லுகிறார். அவர் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களண்டையில் நம்மை நடத்துகிறவர். எங்கே நமக்கு தேவையான ஆவிக்குரிய ஆகாரம் இருக்கிறதோ அங்கே நம்மை கொண்டு சென்றுவிடுவார். அந்த இடத்தில் வந்து நாம் நடக்க வேண்டிய வழியை நமக்கு காண்பிக்கக் கூடியவராய் இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையிலே நெருக்கங்கள் வரும். நெருக்கத்தை சந்திக்காத குடும்பங்கள் என்பது இல்லவே இல்லை. எல்லா நாளும் நமக்கு விசாலங்கள் இருக்காது சில காலங்கள் நெருக்கடிகள் வரும். அப்போது நாம் மிகவும் சோர்ந்து போய்விடுவோம். ஏன்*


WANTED

# முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய

வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 9486588270,9486919522.

நமக்கு இந்த பாடுகள் என்று நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்க வேண்டும். ஆண்டவரே ஏன் எதற்காக இப்படி நடக்கிறது என்று விசாரிக்க வேண்டும். நாம் அப்படி விசாரிக்கும் போது அவர் நாம் நடக்க வேண்டிய வழியை நம்முடைய வாழ்க்கையில் காண்பிக்கிறவராய் இருக்கிறார். ஏனென்றால் அவர் நம்முடைய மீட்பரென்று ஆண்டவர் தெளிவாக உரைக்கிறார். அவர் பரிசுத்தர் வார்த்தையில் பரிசுத்தர் அன்பிலே பரிசுத்தர் அவர் எதை சொல்லியிருக்கிறாரோ அதை நிறைவேற்றாமல் இருக்கவே மாட்டார். ஆகவே பிரயோஜனமான காரியங்கள் எங்கிருக்கிறதோ அங்கே உங்களை கொண்டுபோய் போதித்து நீங்கள் நடக்க வேண்டிய வழியிலே உங்களை நடத்தக் கூடிய ஆண்டவராய் இருக்கிறார். ஆடுகளை ஒரு மேய்ப்பன் எப்படி தனக்கு இஷ்டமான வழியிலே தான் தீர்மானித்த பாதையிலே வழி நடத்திக் கொண்டுபோகிறானோ அதைப் போல பரலோகத்தின் தேவனும் நம்மை நடத்துகிறார்.

**உன் மதில் எப்போதும் என் முன் இருக்கிறது. – ஏசாயா 49:16**

நம்முடைய வாழ்நாட்களின் ஓட்டம் ஆண்டவருடைய கைகளில் வரைபடமாக இருக்கிறது. அந்த பாதை வழியாகத் தான் நம்மை சரியாக நடத்திக்கொண்டிருக்கிறார். எங்கெல்லாம் தடைபட்டு நிற்கிறோம் என்பதை அவர் அறிந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் முன்பாக போய் நின்றார்கள். எரிகோ பட்டணத்திற்கு முன்பாக போய் நின்றார்கள். யோர்தானுக்கு முன்பாக போய் நின்றார்கள். அங்கே தேவன் வழியை உண்டாக்கினார். அந்த மதில்களையெல்லாம் தேவனுடைய கண்கள் பார்த்துக்கொண்டேயிருந்தது.

பிரியமானவர்களே, வியாதி, தரித்திரம் நிந்தை என்ற பாதையில் நீங்கள் நடக்கலாம். ஆனால் அங்கே ஆண்டவர் உங்களை போதித்து சரியான பாதையில் நடத்தக் கூடியவராய் இருக்கிறார். அப்படி நெருக்கங்கள் வரும் போது நாம் தேவ சத்தத்தை கேட்பதற்கு தேவ சமூகத்திலே காத்திருந்து தேவனை நோக்கி பார்க்க வேண்டும். யோசுவா மோசேக்கு பின்பாக இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்த தேவனால் கட்டளைபெற்றான். தேவன் மோசே மூலமாக யோசுவாவை அபிஷேகம் பண்ணி வைத்தார். மோசேயினுடைய மரணத்திற்கு பின்பாக யோசுவா தேவ சமூகத்திலே காத்திருந்த போது யோசுவாவுக்கு ஆண்டவர் சொல்லுகிறார் நான் மோசேயோடு இருந்தது போல உன்னோடு கூட இருப்பேன். அதைப் போல ஆண்டவர் உங்களுக்கு வாக்குக் கொடுப்பாரானால் அந்த வாக்குத்தத்தத்தை அவர் நிறைவேற்ற வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அவர் போதுமானவராய் இருக்கிறார். யோசுவா ஜனங்களை வழி நடத்தி வரும்போது எரிகோ பட்டணத்தை பிடித்தார்கள். அப்போது இஸ்ரவேல் ஜனங்கள் உற்சாகமடைந்தார்கள். ஏனென்றால் அவர்கள் பெரிய வெற்றியைப் பார்த்தார்கள். அதினால் உள்ளம் மகிழ்ந்தது. யோசுவாவும் சந்தோஷப்பட்டான்.

ஆண்டவர் என்ன சொன்னாரோ அதை அப்படியே செய்தார். நீங்கள் ஏழு நாட்கள் எரிகோவை சுற்றி வாருங்கள். ஏழாவது நாள் ஏழுமுறை சுற்றி வந்து ஆர்ப்பரியுங்கள். அப்போது எரிகோ உடைந்து விழும் என்று சொன்னார். அவர் என்ன சொன்னாரோ அது அப்படியே நடந்தது. அலங்கம் இடிந்து விழுந்தது. எரிகோ பட்டணத்திற்கு வெளிப்புறத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் இருந்தார்கள். எரிகோ சுவர் உடைந்து பட்டணத்திற்கு வெளியே விழுந்தது. அதை அவர்கள் ஏறிப்போகிற படிக்கல்லாய் மாற்றினார். தடைக்கல்லை படிக்கல்லாய் மாற்றினார். யோசுவா அடுத்தபடியாக ஆயி பட்டணத்தை பிடிக்கும்படியாக பட்டணத்தை வேவுபார்க்க ஆட்களை அனுப்பினான். ***யோசுவாவினிடத்தில் திரும்பி வந்து, அவனை நோக்கி: ஜனங்கள் எல்லாரும் போக வேண்டியதில்லை; ஏறக்குறைய இரண்டாயிரம் மூவாயிரம் பேர் போய், ஆயியை முறிய அடிக்கலாம்; எல்லா ஜனங்களையும் அங்கே போகும்படி வருத்தப்படுத்தவேண்டியதில்லை; அவர்கள் கொஞ்சம்பேர்தான் என்றார்கள். அப்படியே ஜனங்களில் ஏறக்குறை மூவாயிரம்பேர் அவ்விடத்திற்குப் போனார்கள்; ஆனாலும் அவர்கள் ஆயியின் மனுஷருக்கு முன்பாக முறிந்தோடினார்கள். – யோசுவா 7:3,4*** இஸ்ரவேலில் முப்பத்தாறு வீரர்கள் விழுந்தார்கள். அந்தநேரம் யோசுவா துக்கமடைந்து என்ன செய்வதென்று ஆண்டவருடைய சமூகத்தில் விசாரித்தான். நம்முடைய வாழ்க்கையில் நாம் எந்த பாதையில் போக வேண்டும் என்று ஜெபத்தில் காத்திருக்கிற அனுபவம் உண்டா? ஆண்டவரிடத்தில் விசாரிக்கும்படி அவன் தேவ சமூகத்தில் விழுந்து கிடந்தபோது தேவனுடைய சத்தம் அவனுக்கு உண்டானது. எதனால் ஆயியின் மனுஷருக்கு முன்பாக முறிந்தோடிப் போனார்கள் என்று பார்த்தோமானால் அவர்களிடத்தில் பாவம் இருந்தது. எரிகோவின் யுத்தநாளிலே என் கட்டளையை மீறினீர்கள் என்று ஆண்டவர் வெளிப்படுத்தினார். யுத்தவீரரில் ஒருவனான ஆகான் தேவ கட்டளையை மீறி பொன் பொருளைத் தனக்காக ஒளித்துவைத்தான். அவன் மறைவிலிருந்தாலும் அவன் குடும்பம் இதினால் கல்லெறியப்பட்டு பின் இஸ்ரவேலர் தங்களை பரிசுத்தம்பண்ணிக் கொண்டார்கள். பின்பு, ஆண்டவர் தெளிவாக அவர்களை வழி நடத்தினார். ***நீ எரிகோவுக்கும் அதின் ராஜாவுக்கும் செய்தது போல, ஆயிக்கும் அதின் ராஜாவுக்கும் செய்யக்கடவாய்; அதில் கொள்ளையிட்ட பொருள்களையும் மிருக ஜீவன்களையும் உங்களுக்குக் கொள்ளையாக எடுத்துக்கொள்ளலாம். பட்டணத்துக்குப் பின்னாலே பதிவிடையை வை என்றார். அப்பொழுது ஆயியின் மேல் போக, யோசுவாவும் சகல யுத்த ஜனங்களும் எழுந்து புறப்பட்டார்கள்; யோசுவா யுத்த வீரரான முப்பதினாயிரம் பேரைத் தெரிந்தெடுத்து இராத்திரியிலே அவர்களை அனுப்பி, அவர்களுக்குக் கட்டளையிட்டதாவது: நீங்கள் பட்டணத்தின் பின்னாலே பதிவிருக்கவேண்டும்;***

*பட்டணத்துக்கு வெகுதூரமாய் போகாமல், எல்லாரும் ஆயத்தமாயிருங்கள். நானும் என்னோடிருக்கிற சகல ஜனங்களும் பட்டணத்தண்டையில் கிட்டிச் சேருவோம். அவர்கள் முன்போல எங்களுக்கு எதிராகப் புறப்பட்டு வரும்போது, அவர்களுக்கு முன்னாக நாங்கள் ஓடிப்போவோம். அப்பொழுது அவர்கள்: முன்போல நமக்கு முன்னாக முறிந்து ஓடிப்போகிறார்கள் என்று சொல்லி, எங்களைத் துரத்தப் புறப்படுவார்கள்; நாங்களோ அவர்களைப் பட்டணத்தைவிட்டு இப்பாலே வரப்பண்ணுமட்டும், அவர்களுக்கு முன்னாக ஓடுவோம். அப்பொழுது நீங்கள் பதிவிலிருந்து எழும்பிவந்து, பட்டணத்தைப் பிடிக்க வேண்டும், உங்கள் தேவனாகிய கர்த்தர் அதை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுப்பார். – யோசுவா 8:2–7*

*சின்ன சின்னக் காரியமாயிருந்தாலும் தேவனிடத்தில் விசாரிக்கும் போது அவர் சரியான ஆலோசனை கொடுத்து நடத்துவார். இதைச் செய் இதைச் செய்யாதே என்று ஆண்டவர் நாம் நடக்க வேண்டிய வழியிலே பிரயோஜனமானவைகளை போதித்து நம்மை நடத்துவார்.*

**ஊழியத்தை முடித்து நானும் ஒரு சகோதரருமாக ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தோம். நாங்கள் ஏறிய பேருந்து காலியாக இருந்தது. அந்தபேருந்தின் நடுப்பகுதியில் இருவர் அமரும் இருக்கையில் அமர்ந்து பேசிக்கொண்டு பிரயாணம் செய்தோம். ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம். அந்தபேருந்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் ஏற ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஆவியானவர் என்னோடு பேச ஆரம்பித்தார். மகனே நீ எழுந்து முன்பக்கமாக இருக்கிற இருக்கையில் போய் அமர்ந்து கொள் என்று சொன்னார். அப்போது அருகில் இருக்கிற ஊழியரை பார்த்து நாம் முன் பக்கமாக இருக்கிற இருக்கையில் போய் அமர்ந்து கொள்வோம். ஆவியானவர் என்னை தூண்டிக்கொண்டிருக்கிறார் நாம் போய் உட்காரலாம் என்று சொன்னேன். அப்போது அந்த ஊழியர் நாம் இங்கேயே உட்காரலாம் என்று சொன்னார். இல்லை நாம் முன்னால் போய் உட்கார்ந்து கொள்ளலாம் என்று சொல்லி முன்னால் போய் அமர்ந்து கொண்டோம். அதிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரம் கடந்து போய்கொண்டிருந்த பேருந்து நான்கு வழிச் சாலையை கடந்தது. அப்போது குறுக்கே சரக்கு ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வண்டி வந்து எங்கள் பேருந்தின் மீது மோதியது. அதுமோதியதில் பேருந்து குறுக்காக வளைந்து எங்களுக்கு பின்னே இருந்த இருக்கையில் இருந்த பயணிகள் கைகள் உடைந்து, கால்கள் உடைந்து, முகங்கள் சிதைந்து உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிற நிலையில் இருந்தார்கள். ஆனால் எங்கள் ஜீவனை தேவன், ஒரு சேதமும் இல்லாதபடிக்கு காத்தார்.**

*பிரியமானவர்களே, ஆண்டவர் நமக்கு பிரயோஜனமானவைகளை போதித்து நாம் நடக்க வேண்டிய வழிகளில் நம்மை நடத்துவேன் என்று நமக்கு இந்த மாதத்தில் வாக்குத்தத்தத்தை கொடுக்கிறார்.* ***தாவீது அவ்விடத்தை விட்டு மோவாபியரைச் சேர்ந்த மிஸ்பேக்குக் போய், மோவாபின் ராஜாவைப்***

***பார்த்து: தேவன் என்னை எப்படி நடத்துவார் என்று நான் அறியுமட்டும், என் தகப்பனும் என் தாயும் உங்களிடத்திலே தங்கியிருக்கும்படி தயவுசெய்யும் என்று சொல்லி, அவர்களை மோவாபின் ராஜாவிடத்தில் அழைத்துகொண்டு போய்விட்டான் – 1சாமு. 22:3,4***

*தாவீது சவுலின் நிமித்தம் இரவு பகலாய் நெருக்கப்பட்டான். இரவில் படுத்தால் கூட தாவீதுக்கு நிம்மதியான தூக்கம் இல்லை. எந்த நேரத்தில் என்ன சம்பவிக்கும் என்பது தெரியாது. அந்நேரத்தில் சவுல் தாவீதை கொலைசெய்யும்படி அவனை பின்தொடர்ந்து கொண்டிருந்தான். தாவீதின் நிமித்தமாக தாவீதின் தாய் தகப்பன் சகோதரர்கள் எல்லாருக்கும் ஆபத்து வரும் என்ற ஒரு சூழ்நிலை உருவான போது அவனுடைய தாய் தகப்பன் சகோதரர்கள் எல்லோருமே தாவீதோடு கூடிக்கொண்டார்கள். ஆகவே இன்னும் ஒரு கூட்டம் பேர் அவனோடு இணைந்திருந்தார்கள். அப்பொழுது எல்லோரும் சவுலின் நிமித்தம் மரித்து விடக்கூடாது என்ற பயத்தோடு அவர்கள் இருந்த போது தாவீது இஸ்ரவேல் தேசத்தை விட்டு மோவாப் தேசத்தின் ராஜாவினிடத்தில் தஞ்சம் புக அங்கே வந்தான். அவன் சொல்லக் கூடிய ஒரு வார்த்தையை நீங்கள் நன்றாக கவனிக்க வேண்டும். தேவன் என்னை எப்படி நடத்துவாரோ? என்று சொல்லுகிறான். நம்மில் அநேகருக்கு வாக்குத்தத்த வசனம் மட்டும் தான் உள்ளத்தில் பதியும். மற்றபடி எதுவுமே உள்ளத்தில் பதியாது. ஆபத்துக் காலத்தில் தாவீது தேவனுடைய வார்த்தைக்காக காத்திருந்தான்.*

*பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் நெருக்கடி வந்துவிட்டால் அந்த நெருக்கத்திலிருந்து நாம் எப்படி மீண்டு வெளியே வருவது? என்று தேவ சமுகத்திலே விசாரித்து காத்திருப்போமானால் ஆண்டவர் அதைத் தெளிவாக வெளிப்படுத்தி நடத்துவார். நெருக்கடிகள் வரும்போது அதற்குள்ளேயே இருந்து நாம் உழன்று கொண்டிராதபடிக்கு அதிலிருந்து வெளியே தூரமாய் போய் தனித்து ஆண்டவரிடத்தில் விசாரிக்க வேண்டும். தாவீது அதைத் தான் செய்தான். ஆண்டவர் என்னை எப்படி நடத்துகிறார் என்பதை நான் பார்க்க வேண்டுமென்று காத்திருந்தான். அவனுடைய காத்திருக்குதலைதேவன் அறிந்தார். அவனுடைய காயங்களை உணர்ந்தார். தீர்க்கதரிசியை அவனிடத்தில் அனுப்பி என்ன செய்ய வேண்டுமென்று தன்னுடைய வார்த்தையை அவனுக்கு கொடுத்தார். தாவீதை தேவன் தெளிவாக நடத்தி முடிவில் தேசத்தையே அவனிடம் கொடுத்தார். ஏனென்றால் அவன் தேவ ஆலோசனைக்காக காத்திருப்பவன்.*

**ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் மூன்று நாட்கள் ஊழியத்திற்காக நான் சென்றிருந்தேன். அந்த சபையில் இருக்கிற சகோதர சகோதரிகள் திருமணமாகாமல் ஊழியத்தை செய்து கொண்டிருந்தார்கள். அன்று இரவு ஊழியத்தை முடித்து அங்கே தங்கியிருந்து அடுத்த நாள் காலையில் ஊருக்கு வருவதாக தீர்மானித்து அங்கேயே தங்கியிருந்தேன். நான் அந்த நாள் இரவில் அந்த சபைக்காக அங்கிருக்கக் கூடிய சகோதர**

சகோதரிகளுக்காக ஜெபித்துவிட்டு நான் படுக்கைக்கு போனேன். விடியற்காலத்தில் ஆண்டவர் ஒரு தரிசனத்தை எனக்கு காண்பித்தார். அந்த தரிசனத்தில் சபையில் இருக்கக் கூடிய திருமணமாகாத அந்த ஊழியரை எனக்கு காண்பித்து அவர் பணத்தை திருடியதாக குற்றம் சுமத்தி அங்கிருக்கிற எல்லோரும் அவருக்கு விரோதமாக எழும்பி அவருடைய பெட்டி படுக்கையெல்லாம் வெளியே தூக்கி எறிந்து சாலையில் போட்டு வெளியே போ என்று சொல்வதாக கண்டேன். விடியற்காலத்தில் நான் எழுந்து ஜெபம் பண்ணி பிரயாணத்திற்காக ஆயத்தப்பட்டபோது அவர் என்னை வழியனுப்ப வந்தார். அப்பொழுது ஆண்டவர் அந்த ஊழியரை அழைத்து அவரிடம் தரிசனத்தை பற்றி சொல்லி விடு என்று சொன்னார். நான் அவரிடம் கண்ட தரிசனத்தை சொல்லி நீண்ட காலம் நீங்கள் இந்த இடத்தில் இருக்க முடியாது என்று ஆண்டவர் சொல்லுகிறார் என்றேன். அப்பொழுது அவர் நான் இங்கே நன்றாகத் தானே இருக்கிறேன். என்னை இங்கு கனப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இந்த வாலிப வயதில் எனக்கு பெரிய சபையைக் கொடுத்திருக்கிறார்கள். இங்கு நான் மூன்று வருடங்களாய் இருக்கிறேன் என்று அவர் சொன்னார். மூன்று மாதங்கள் கழித்து வழக்கமாக நான் உபவாசம் பண்ணி ஜெபிக்கக் கூடிய அந்த நாளில் அந்த ஊழியர் வந்திருந்தார். அண்ணா, என்னை வெளியே அனுப்பி விட்டார்கள் எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்று சொன்னார். ஜெபம் பண்ணி ஆண்டவருடைய ஆலோசனையை விசாரிக்க வேண்டுமென்று சொன்னார். வாருங்கள் இது என்னுடைய உபவாச நாள் நாம் இருவரும் சேர்ந்து ஜெபிக்கலாம் என்று சொல்லி கண்ணீரோடு ஜெபித்தோம். ஆண்டவரே இதுவரை என்னுடைய ஊழியத்தில் என்ன நடக்கும் என்று சொன்னீர் இனி நான் என்ன செய்ய வேண்டுமென்று அவர் கண்ணீரோடு அழுது ஜெபித்தார். அப்பொழுது ஆண்டவர் உன்னை அப்போஸ்தலனாக தெரிந்து கொண்டேன். நான் உன்னை அறியாத மக்களிடத்தில் அனுப்புவேன் என்று ஆண்டவர் சொன்னார். இதை நான் அவரிடம் சொன்ன போது மறுபடியும் அவர் கலக்கமானார். அவருடைய மனதில் கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நான் சபை ஊழியம் செய்தே பழக்கப்பட்டுவிட்டேன். நான் மிஷனெரியாக எப்படிச் செல்லமுடியும்? என்னால் இதை செய்ய முடியுமா என்று தெரியவில்லை என்று சொல்லி மாலை நேரம் புறப்பட்டு சென்றார். இந்த ஊழியக்காரர் சொன்னது சரிதானா? முன்பு இவர் சொன்னது நடந்தது. அதற்காக நான் இவர் சொன்னதை ஏற்றுக்கொள்ள முடியாது. நீர் என்னிடத்தில் பேசும் வரைக்கும் உபவாசம் என்று சொல்லி ஒருநேரம் மட்டும் சாப்பிட்டு அவர் உபவாசம் பண்ணி ஜெபித்துக் கொண்டிருந்திருக்கிறார். அறுபத்து ஒன்பது நாட்கள் கடந்து எழுபதாவது நாளில் அவருக்கு அறிமுகமான ஆவிக்குரிய நண்பர்கள் அவரிடத்தில் சென்று நாங்கள் வடமாநிலத்தில் உள்ள பணித்தளத்திற்கு செல்வதற்காக டிக்கெட் எடுத்திருந்தோம் அதில் இருவர் தற்போது வரவில்லை நீயும் வீட்டிலிருந்து ஜெபித்துக்கொண்டிருக்கிறாய் வா

நாம் போய் அங்கே பணித்தளங்களை பார்வையிட்டு வரலாம் என்று சொல்லி இவரை அழைத்த போது சரி போகலாம் என்று போக ஆயத்தமானார். எழுபத்தைந்தாவது நாள் பணித்தளத்தை சுற்றிப் பார்த்துவிட்டு மலை உச்சியில் இருக்கிற பணித்தளத்தை பார்த்த போது அவரையும் அறியாமல் தேவனுடைய வல்லமை அவரை நிரப்ப ஆரம்பித்தது. பணித்தளத்தை பார்வையிட்டு எல்லோரும் திரும்பி வரும் போது அவர் ஒரு பாறையில் உட்கார்ந்திருப்பதை பார்த்து நீ ஏன் இங்கே இருக்கிறாய் வா நாம் போகலாம் மாலை நேரமாகிறது. நாம் கீழே இறங்க வேண்டுமென்று அழைத்த போது இல்லை நான் வர மாட்டேன். இது தான் என் பணித்தளம் ஆண்டவர் என்னை இங்கே தான் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னார். உடனே அவர்கள் உன்னுடைய விருப்பத்திற்கு இங்கே இருக்க முடியாது. நாம் பணித்தள இயக்குநரிடத்தில் விசாரித்து ஜெபித்து இந்த பணித்தளத்தை கொடுத்தால் நீ வரலாம் என்று சொல்லி பின்பு, கர்த்தருடைய ஆலோசனையின் படி அவருக்கு அந்த பணித்தளம் கொடுக்கப்பட்டது. அங்கே சில காலம் ஊழியத்தை செய்த பிற்பாடு அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட அவர் அந்த மலைக்கு பின்புறம் இருக்கக் கூடிய மக்கள் மத்தியில் பெரிய மிஷனெரி ஊழியத்தை செய்து கொண்டிருக்கிறார். அந்த பணித்தளத்திலிருந்து ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அதை நான் வாசித்த போது, அண்ணா, நீங்கள் சொன்னது போல கர்த்தர் என்னை இங்கே தூக்கி கொண்டு வந்து விட்டார் என்று எழுதியிருந்தார். இந்த நிகழ்வுகளையெல்லாம் நான் அந்த கடிதம் மூலம் அறிந்து கொண்டேன்.

*பிரயோஜனமானதை ஆண்டவர் நமக்கு போதித்து நடத்துகிறவர். நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஆண்டவரே என்னை என்ன விதமாய் நடத்த வேண்டுமென்று நீர் சித்தமாயிருக்கிறீர் அந்த பாதையில் என்னை நடத்தும் என்று ஜெபிக்க வேண்டும். மற்றொரு விசை தாவீது தான் அந்நிய தேசத்திலிருந்த போது, அவன் எல்லாவற்றையும் இழந்து போன நிலை வந்தது.* ***தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே, சிக்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே, அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சிக்லாகின்மேலும் விழுந்து, சிக்லாக்கைக் கொள்ளையடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்து, ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக்கொண்டு, தங்கள் வழியே போய்விட்டார்கள். தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்திற்கு வந்த போது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைபிடித்துக்கொண்டு போகப்பட்டார்கள் என்றும் கண்டார்கள். அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். – 1சாமு. 30:1–4*** *தாவீது ஒரு பக்கம் நெருக்கப்பட்டாலும் அவன் எல்லாவற்றையும் இழந்த சூழ்நிலையில் தேவனிடத்தில் ஆலோசனைக்காக*

காத்திருந்தான். **தாவீது கர்த்தரை நோக்கி: நான் அந்தத் தண்டைப் பின்தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா? என்று கேட்டான். அதற்கு அவர்: அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் என்றார். – 1சாமு. 30:8** தேவனாகிய கர்த்தர் தாம் சொன்னபடியே அவனோடு கூட இருந்து எதிராளியைப் பின்தொடர்ந்து போகச் செய்து எல்லாவற்றையும் மீட்க தேவன் வழி நடத்தினார். ஏனென்றால் தேவாதி தேவன் நம்முடைய தகப்பன். ஆகவே அவர் நம்மை ஒரு பிள்ளைளையை போல நடத்த விரும்புகிறார். தேவனுடைய பிள்ளைகள் எந்தக் காரியமானாலும் நாம் ஆண்டவரிடத்தில் விசாரிக்கும் போது, என் குடும்பத்தின் நிலைமை இப்படி இருக்கிறது என் பிள்ளைகள் வாழ்க்கை இப்படி இருக்கிறது என்னுடைய பொருளாதாரத்தின் நிலைப்பாடு இப்படி இருக்கிறது என்று எல்லாவற்றையும் தேவனிடத்தில் அறிக்கை செய்து காத்திருக்கும் போது அவர் உங்களை சரியான பாதையில் நடத்துவார் அந்த இடத்தில் தேவ சத்தத்தை நீங்கள் கேட்பீர்கள். பிரயோஜனமானவைகளை அவர் உங்களுக்கு போதிக்கிறவராய் இருக்கிறார் நீங்கள் நடக்க வேண்டிய வழியிலே அவரே உங்களை கரம்பிடித்து நடத்துவார். குருடனை அவன் அறியாத வழியிலே நான் கரம்பிடித்து நடத்துவேன். பேதையானாலும் திசைகெட்டு போவதில்லை. **நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று**


முதலூரில்

# எழுப்புதல் உபவாச ஜெபம்

**நாள் : 05–08–2023 முதல் சனிக்கிழமை**

**நேரம்: காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை**

தேவ செய்தி:

சகோ. T. ஆசீர் ஞானராஜ்

**இடம்: எழுப்புதல் ஜெப மையம், முதலூர்**

**தொடர்புக்கு: 9486588270**

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!
தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!


**உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். – ஏசாயா 30:21**

நான் என்ன செய்ய வேண்டும் ஆண்டவரே என்ற கேள்வி உங்கள் உள்ளத்திலே உருவானால் தரிசனம் மூலமாக ஆண்டவர் உங்களிடத்தில் பேசுவார். ஊழியர்களை அனுப்பி உங்களோடு பேசுவார் இல்லையென்றால் வசனத்தின் மூலமாக பேசுவார் அவரே உங்களை பார்க்க நேரடியாக வருவார்.

**ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒடிசா மாநிலத்தில் நாம் நடத்தி வந்த பள்ளிக்கூடம் மிகவும் பலவீனமடைய ஆரம்பித்தது. காரணம் ஒடிசா மாநிலத்தில் ஒரு அமைப்பை சார்ந்த ஒரு பள்ளிக்கூடம் வந்தது. அரசாங்கம் மிகவும்**

எளிதாக அவர்களுக்கு அனுமதி கொடுத்தார்கள். அந்தப்பகுதியில் உள்ள மக்கள் கல்வியை விட தங்கள் மதம் தான் பெரிய காரியம் என்று பிள்ளைகளை பெற்றோர்கள் அந்தப் பள்ளியில் சேர்த்தார்கள். நமது பள்ளிக்கூடம் பெலவீனப்பட்டு கடைசியாக முப்பத்தைந்து பிள்ளைகள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டது. அந்த நாட்களில் நாம் ஆலயத்திலும் ஒரு சில கட்டிடத்திலும் கல்விப்பணியை நடத்தியதால் ஒருசிலர் மதவழிபாட்டு இடத்தில் நீங்கள் எப்படி பள்ளிக்கூடம் வைத்து நடத்தலாம் என்று பூட்டுத் தூக்கி போராட்டம் என்று பூட்டுவதற்கு வந்தார்கள். பலவிதமான எதிர்ப்புகள் நிறைந்த சூழ்நிலை வந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. வேறு வழியில்லாமல் நாங்கள் அனைவரும் தீர்மானம் செய்து இனி நம்மால் தொடர்ந்து இந்த பள்ளிக்கூடத்தை நடத்த முடியாது இதை மூடி விட்டு டியூசன் சென்டர் நடத்துவோம் என்று தீர்மானித்தோம். ஆண்டவரே நீர் தான் இந்த பள்ளிக்கூடத்தை தொடங்க சொன்னீர் நீர் சொன்னதினால் தான் நான் அதை செய்தேன். இன்றைக்கு பள்ளிக்கூடம் தலைகீழாக இருக்கிறது நான் என்ன செய்வது என்று கேட்டு ஜெபித்தோம். ஆனால் அந்த கடைசி தருணத்தில் அந்த இடத்தில் தேவனிடத்தில் ஜெபித்து என்ன செய்யலாம் என்று கேட்டு அவர் தொடர்ந்து நடத்த சொன்னால் நடத்தலாம் இல்லையென்றால் மூடிவிடலாம் என்று முடிவு செய்து உபவாசித்து ஜெபித்தோம். அந்த நாள் அதிகாலையில் ஆண்டவர் எனக்கு ஒரு தரிசனத்தை காண்பித்தார். நான் ஒரு பட்டணத்தில் ஊழியத்தை முடித்து ஊருக்கு வருவதற்காக பேருந்தை பிடிப்பதற்காக வேகமாக வந்து கொண்டிருக்கிறேன். அது மிகவும் நெருக்கமான இடம். நான் நடந்து போகும் போது என் எதிரில் எனக்கு அறிமுகமான ஒரு ஊழியர் வந்து கொண்டிருக்கிறார் நான் வேகமாக போவதை பார்த்து என்னுடைய கையைப்பிடித்து இழுத்து எங்கே போகிறீர்கள் என்று என்னிடம் கேட்கிறார். நான் அவரைப்பார்த்து நலம் விசாரித்து விட்டு அவரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். அப்போது அவர் பணித்தளத்தில் நடக்கிற ஊழியங்களை குறித்து என்னிடம் கேட்கிறார். அப்போது நான் மிகவும் சோர்வுடன் அவரிடம் எங்களால் பள்ளிக்கூடத்தை தொடர்ந்து நடத்தமுடியவில்லை. மத எதிர்ப்பாளர்கள் தொந்தரவு அதிகமாக இருக்கிறது. தொடந்து நடத்த எங்களிடம் போதுமான பொருளாதார வசதியும் இல்லை. அதனால் பள்ளிக்கூடத்தை மூட தீர்மானித்திருக்கிறோம் என்று நான் சொன்ன போது அவருடைய முகரூபம் மாறியது. அவர் இயேசுவாக எனக்கு தெரிகிறார். நீ இந்த பள்ளிக்கூடத்தை மூடக் கூடாது.

உபத்திரவ காலம் வரும் அந்த நாட்களில் நீங்கள் சுவிசேஷப் பணியை தொடர்ந்து செய்ய முடியாது. நீங்கள் எங்கெல்லாம் கல்விப்பணிக்காக நிலங்களை வாங்கி இடங்களை சேர்த்து வைத்திருக்கிறீர்களோ அங்கு தான் நீங்கள் கூடி ஆராதித்து வசனத்தை கேட்க முடியும். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பாளர்கள் பெருகுவார்கள். தற்போது பள்ளிக்கூடம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றார்.

*இன்றைய அவசரமான காலத்தில் தேவஜனங்கள் மத்தியில் காத்திருப்பது பிடிக்காத காரியமாய்*

இருக்கிறது. ஆண்டவருடைய பாதத்தில் காத்திருப்பதோ அல்லது ஆண்டவர் பேசுவார் என்று விசுவாசிப்பதோ ஆவிக்குரிய மக்களுக்கு அது ஏற்றுக்கொள்ளக் கூடாத ஒரு காரியமாயிருக்கிறது. எதுவாயினும் உடனே நடக்க வேண்டும். எங்கேயாவது போய் ஓர் ஊழியரைப் பார்த்து கேட்டு அவர் என்ன சொல்லுகிறாரோ அதை அப்படியே செய்ய வேண்டும். காத்திருப்பதோ உபவாசிப்பதோ எல்லாம் தூரமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். உங்களுக்குள்ளே இருக்கிற ஆவியானவரை நீங்கள் ஏன் மட்டுப்படுத்த வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். **கிறிஸ்து எனக்குள்ளே பேசுகிறாறென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே அவர் உங்களிடமாய் பலவீனமுள்ளவரல்ல. உங்களிடத்தில் அவர் வல்லவராயிருக்கிறார். – 2கொரி.13:3** பவுல் சீஷர்களைப் பார்த்து ஆண்டவர் என்னோடு எப்படி பேசுகிறார் என்று நீங்கள் கேட்கிறீர்களே. அவர் உங்களிடத்திலும் வல்லவராக இருக்கிறார்.

நம் ஆண்டவர் மற்ற தெய்வத்தை விட விசேஷித்தவர் அவர் பேசக் கூடிய தெய்வம். அவருக்காக காத்திருந்தால் அவர் பேசுவார். நீங்கள் அவருக்காக காத்திருப்பதை அவர் பார்ப்பார். என் மகன்(ள்) ஒருநாள், ஒரு வாரம், ஒரு மாதம் ஒரு வருடம் என்று காத்திருக்கிறானே(ளே) என்று ஆண்டவர் நீங்கள் காத்திருப்பதை நினைத்து அவர் உங்கள் பக்கமாய் சாய்ந்து வருவார். தாவீது சொல்லுகிறான் **கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன். அவர் என்னிடமாய்ச் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டார். – சங்.40:1** தாவீது பொறுமையோடு காத்திருந்து ஆண்டவரை அவனிடமாய் திருப்பினான். நாம் அவருக்காக காத்திருக்காமல் எங்கெங்கோ போய் அநேக பணங்களை விரயம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த மாதத்திலே தேவன் உங்களுக்கு கொடுக்கிற ஆலோசனை நான் உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்.

இதை ஒரு முதலமைச்சர் சொல்லவில்லை பிரதமர் சொல்லவில்லை பெரிய அதிகாரிகள் சொல்லவில்லை. நம்மை உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். நான் இருக்கிறேன் நான் உனக்கு போதிப்பேன் என் கண்ணை உன்மேல் வைப்பேன் என்று சொல்லுகிறார். இரவும் பகலும் நான் உன்னை கவனித்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு தீங்கை கொண்டு வருவது எதுவோ அதையெல்லாம் அருகில் வராமல் தடுத்து கொண்டேயிருப்பேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆண்டவர் உங்களோடும் பேசக் கூடியவராய் இருக்கிறார். நீங்கள் அவருக்காக காத்திருங்கள். உங்கள் உள்ளத்தில் அநேக கேள்விகள் இருக்கிறது. இந்த பாதையில் செல்வதா? எப்படிச் செல்வது என்று கலக்கத்தோடு இருக்கிறீர்கள்.

தேவ சத்தத்தைக் கேட்க காத்திருங்கள் ஆண்டவர் உங்களோடு பேசுவார். உங்களை வழி நடத்துவார். **நீங்கள் ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.**

# பணித்தளச் செய்திகள்

## ஓடிசா மாநிலம்

### கோராபுட் மாவட்டம் தசமந்தபூர் பணித்தளம்

**கோந்தபடாபதர்**

இங்கு ஞாயிறு ஆராதனை நடைபெற்று வருகிறது. 40 பேர் கலந்து கொள்கின்றனர். வெள்ளி உபவாச ஜெபம், புதன் வேதபாட வகுப்பு நடைபெறுகிறது.

நமது சபையில் ராஜீப் சாந்தா, ஆனந்தோ ஜானி, தாமஸ் மினியாக்கா ஆகியோர் சரியாக ஆராதனைக்கு வராமல் மற்ற வேலைகளுக்கு முதலிடம் கொடுக்கின்றனர். இவர்கள் ஞாயிறு தோறும் ஆராதனைக்கு வரும்படியாகவும், தனிப்பட்ட முறையில் ஜெபிப்பவர்களாக மாறவும் ஜெபியுங்கள்.

சாந்தி லதா சாந்தா, பங்கஸ் சாந்தா இந்த தம்பதியினர் சபையின் மூப்பர் குடும்பம் இந்த பங்கஜ் சாந்தா என்பவருக்கு கை, கால்கள் உணர்ச்சியற்று காணப்படுகிறது. சாந்தி லதா சாந்தா சகோதரிக்கு கழுத்தில் அதிகமான வலி உள்ளது. இவர்களுக்கு கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.

பல்லிகாட் கிராமத்தில் மமதா பிசய் என்ற சகோதரி குடும்பத்தில் யாருக்கும் தெரியாமல் ஜெபத்திற்கு வருகிறார்கள். சுண்டி இனத்தவர் இவர்களது குடும்பம் இரட்சிக்கப்படவும் இந்த சகோதரி மறைமுகமாக அல்லாமல் தைரியமாக வெளிப்படையாக ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்

தாண்டிபுட் என்ற கிராமத்தில் 2 குடும்பத்தினர் ஆராதனைக்கு வருகின்றனர். குவி இன மக்கள் இவர்களுக்கு கிராமத்தில் மிகுந்த எதிர்ப்பு உள்ளது. எதிர்ப்புகள் மாறவும், ஜனங்களை நாம் வழி நடத்தவும் கர்த்தர் திறந்த வாசலை கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்

**தசமந்தபூர் பஞ்சாயத்து:**

துலாபடோ, கொஜீரிகுடா, கொசம்குடா, கும்பாரிகுடா, கொவ்டோ கோந்தி, சுக்ராபுட், தென்துலிகுடா போன்ற கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம்.

**கிர்லிகும்மா**

உப்பரோகொதலா, ரத்தா பந்தோ, தொளரத்தா பந்தோ, கொவ்டோ பாரிக் கொந்தா, சுக்ராபுட், ட்ருக்காகுடா, முசாபட், மச்புட், கொதம்ஜொலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**கோந்தபடா பதர்:**

சுந்தரோ ஜானி, சொம்புரு

முஸ்கா ஆகியோர் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்காக ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு இவர்களுக்கு பரிபூரண சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

## நபரங்கபூர் மாவட்டம் உமர்கோட் பணித்தளம்

**புர்ஜா**: இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெற்று வருகிறது. புதிதாக டொமாய் பூல்லோ என்ற சகோதரி ஞாயிறு ஆராதனைக்கு வருகிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.

சசி செத்தியா என்பவரது மகளுக்கு திருமண நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. (மகள் பெயர் கிரண்) ஆனால் மணமகன் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். இதனால் இவர்கள் மிகவும் வருத்தமுடன் உள்ளனர். இவர்களுக்கு கர்த்தர் சமாதானம் அருளவும், விரைவில் நல்ல மணமகன் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

சொறுசொளா என்ற குழந்தைக்கு எதிராக மந்திரவாதம் செய்துள்ளதாக கூறுகின்றனர். இதனால் சரியாக பால் குடிக்காமல் வாந்தி வயிற்றோட்டம் ஏற்பட்டது. நாங்கள் இயேசுவை விசுவாசிக்கும்படி கூறி ஜெபித்து வந்தோம். இப்போது சற்று சுகமாகியுள்ளது. கர்த்தர் பரிபூரண சுகமருளும்படி ஜெபியுங்கள்.

சஞ்சித் என்ற சகோதரனுக்கு கர்த்தர் தெளிந்த மனநிலையை கொடுக்கும்படியாக ஜெபியுங்கள். ஜெபிப்பது குறையும் போது அதிகமாக மனநிலை பாதிக்கப்படுகிறது. கர்த்தர் பரிபூரண விடுதலையை கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

இந்த மாதம் சஞ்சித் என்ற சகோதரருக்கு மனநிலை பாதிப்பிலிருந்து தேவன் விடுதலை கொடுக்கும்படியாக மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபம் செய்துள்ளோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு விடுதலை கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

புர்ஜா கிராமத்தில் உள்ள டுனா கோரா என்பவரது குடும்பத்திலுள்ளவர்களை கோண்டு இனமக்கள் வந்து மிகவும் அடித்துள்ளனர். டுனாகோரா என்பவர் கிறிஸ்தவ குடும்பத்தினர். இதன் மூலமாக எந்த ஜாதிக்கலவரமும் ஏற்படாமல் இருக்கும்படியாகவும் ஜெபியுங்கள். மேலும் நான் கோண்டு மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறேன். இதனால் ஊழியக்காரனாகிய எனக்கு விரோதமாக யாரும் எழும்பாதபடி ஜெபியுங்கள். சாத்தானுடைய தந்திரங்கள் முறியடிக்கப்பட ஜெபியுங்கள். (இந்த சண்டை ஏற்பட காரணம் ஒரு ஜாதி பெண்ணை மற்றொரு ஜாதி பையன் திருமணம் செய்தது)

கடந்த மாதம் நமது ஊழியத்தின் தலைவர் வந்தபோது ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. இதற்குரிய தேவைகள் அனைத்தையும் தேவன் அற்புதமாக சந்தித்தார். இந்த கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு உணவு கொடுக்க சமைப்பதற்கு பாத்திரங்கள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டோம். இறுதியில் எங்கள் சமுதாயத்திற்காக வைத்திருக்கும் பாத்திரங்கள் இலவசமாக கிடைத்தது. கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக.

# உலகச் செய்திகள்

1. கேரளாவில் வைரஸ் காய்ச்சல் பரவல் அதிகரித்து வரும் நிலையில், காய்ச்சலுக்கு 39 பேர் உயிரிழந்துள்ளதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மேலும் மாநிலம் முழுவதும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காய்ச்சல் போன்ற உபாதைகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
2. ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ஜா மாவட்டத்தில் வறுமை காரணமாக 8 மாத பெண் குழந்தையை ரூ.800-க்கு விற்ற தாய் மற்றும் குழந்தையை வாங்கியவர்கள் உட்பட 4 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.
3. மராட்டியத்தில் தனியார் சொகுசு பஸ் தீப்பிடித்து எரிந்த பயங்கர விபத்தில் 25 பயணிகள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.
4. கார்வார் அருகே ஆன்லைன் விளையாட்டில் ரூ.65 லட்சத்தை இழந்த தொழில் அதிபர் தூக்குப்போட்டு தற்கொலை செய்த விபரீத சம்பவம் நடந்துள்ளது.
5. இஸ்ரேல் ராணுவம் சிரியா மீது தாக்குதல் நடத்த அதிநவீன ஏவுகனை ஒன்றை பயன்படுத்தியது. அதனை வான்வழியில் இடைமறித்து சிரியாவின் வான் பாதுகாப்பு ராக்கெட்டுகள் தகர்த்தன. இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.
6. பிரான்சில் ஆப்பிரிக்க சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட 380 பேருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**


## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
“CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT” என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM, CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**


## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 81909 25800 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஓசூர் | – 94869 19522 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 19522 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 94865 88270 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |


Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.



கஜிரிகுடா



நடமுஞ்சாரி



ருக்குபா

## ஆலயங்களுக்கான அடிக்கல் நாட்டுதல்



டொக்ரிபொதர்

## ஆலய கட்டுமான பணி



நுவாகுடா



செமிலிபொதர்



குட்ருபாடு

Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.07.2023. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

**ஊட்டியில்...**

சால்வேஷன் மிஷனெரி ஊழியங்கள் நடத்தும்

# மிஷனெரி பிரதிஷ்டை



**நாள்:**

**30.07.2023**

ஞாயிறு

காலை 9:30 மணி

**இடம்:**

**பெத்தேல் வேதாகம சபை,**

மசினகுடி, ஊட்டி.

**தேவ செய்தி:**

**சகோ.**

**T. ஆசீர் ஞானராஜ்**

**தொடர்புக்கு: போதகர். கேபிரியல் - 8903774745**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to

**Bro. T.Asir Gnanaraj**

Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.

**Phone: 04639 - 261498**

**Mobile: + 91 96294 99532**